# குண்டர் தடுப்பு சட்டம் பாயுமா?

# மகேந்திரன் தண்டிக்கப்படுவானா?



இதோ, சவடால் விட்டு பேசும் தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த மகேந்திரன் கடந்த 21-06-2022-ல் தஞ்சை மாவட்ட எஸ்.பி-யின் நேரடி பார்வையில் தனிப்படை போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

ஊரின் நடுவில், முச்சந்தில் இவனது சமுக விரோத தொழில்கள் கண்டு எவரும் புகார் கொடுக்க முன்வராத நிலையில், நமது மூத்த பத்திரிகையாளரால், நமது "அரசியல் ஒற்றன்" இதழில் செய்திகள் வெளியிட்டும், அவரது சென்னை முகவரியோடு புகாரும் கொடுக்கப்பட்டு, கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேல், மதுக்கூர் காவலர் SBHC செந்தில்குமாரால் நடவடிக்கை எடுக்காமல் முடக்கப்பட்டிருந்ததை, நம்மால் எஸ்.பி.யின் நேரடி பார்வைக்கு எடுத்துச் சென்றதால் மட்டுமே மகேந்திரன் தற்போது கைது செய்யப்பட்டான்.

அதே போல் கடந்த இரண்டரை மாதங்களாக, நம்மால் மதுக்கூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட, மற்றொரு சில புகார்களும், இன்னும் நடவடிக்கை எடுககாதபட்சத்தில், நிலுவையில் இருக்கிறபோது, அந்த புகாரில் உள்ள குற்றவாளிகளில் பெரும்பாலோனர், கடந்த சில வருடங்களுக்கு முன் மதுக்கூர் காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி பெண் ஆய்வாளர் ஒருவர் முக்கூட்டு சாலையில் சீருடையில் நின்று பணியாற்றி கொண்டிருந்த போது, அவரை பணி செய்யவிடாமல் தடுத்து, அடித்து, உதைத்து, காலில் மிதித்து, அவரது மேல் சட்டை பாக்கெட்டை - கிழித்து மானபங்கப்படுத்திவிட்டு, அன்றைய வழக்குகளில் சிக்காமல் தப்பியவர்களும், இந்த கூட்டத்திற்கு தலைமை ஏற்ற, கள்ள லாட்டரி வியபாரி மற்றும் கலப்படமது விற்பனையாளரான மகேந்திரனின் குரூப்ஸ் -களே மேற்கண்ட குற்றவாளிகளாவர்.

அன்று, பட்டுக்கோட்டையின், ASP - ஆக பணியாற்றிய அதிரடியான நேர்மையான காவல் அதிகாரியான அன்பு IPS அதிகாரியால் எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கையின் காரணமாக, சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்தாலும், ASP-க்கு பயந்து பலர் ஊரை விட்டு தப்பி ஓடினர்.









nellaigopal08@gmail.com

அதே நேரத்தில் அந்த நிகழ்வுகளை இன்றும் மதுக்கூர், பட்டுக்கோட்டை போலீசாரால் மறக்க முடியாத நிலையில் தான் இருந்து வருவதும் குறிப்பிடதக்கது.

இந்த நிலையில் திருமதி.ரவளிப்பிரியா IPS அவர்களின், அதிரடியால்,மதுக்கூர் காவலில் சிக்கிய மகேந்திரனுக்கு லாட்டரி வழக்கை மட்டுமே பதிவு செய்த, மாவட்ட எஸ்.பி.யின் SBHC- செந்தில்குமாரின் அரவணைப்பின் அசிங்கத்தை என்ன சொல்வது?

எனவே, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டிய, மகேந்திரனுக்கும், இவனது கூட்டாளிகளான, தற்போது நமது புகாரில் நிலுவையில் உள்ள குற்றவாளிகளின் தரம் அறிந்து, அந்த புகாரின் விசாரணைகள் அறிந்து அனைவர் மீதும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட பணிந்து கோருகிறோம்.

மேலும், அன்று நடவடிக்கை எடுத்த பட்டுக்கோட்டை ASP- ஆன,அந்த நேர்மையான அதிகாரி, மதிப்பிற்குரிய அன்பு IPS அவர்கள்,இன்று சென்னையில் ஐ.ஜி- ஆக உயர்ந்த பதவியில் உள்ளார் என்பது நினைவில் நிற்பதால், அன்று நடந்தது குறித்த அந்த IPS ஆன, இன்றைய ஐ.ஜின் நினைவலைகளின் அறிக்கைகள், மாவட்ட காவல் காணிப்பாளரான அதிரடி எஸ்.பி. திருமதி ரவளிப்பிரியா IPS அவர்களுக்கு பேருதவியாக அமையும் என்பதே நிதர்சனம்.

எனவே,கொடூர குற்றங்களையும், சமூக விரோதொழில்களை செய்துவரும் மகேந்திரன் போன்றோர்களையும், காவல்துறைக்கே சவால்விடும், இந்த மகேந்திரன் என்ற குற்றவாளி மீது, குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அனைத்து தகுதிகளும் இவனுக்கு உண்டு என்பதையும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்

மேலும், மதுக்கூர் காவல் நிலையத்தில் கைதான மகேந்திரனை பார்க்க வந்தவர்களிடமும் மற்றும், இவனை சிறைக்கு அழைத்து செல்லும் முன், மகேந்திரனின் கூட்டாளிகளான சிலரிடமும் பேசிய மகேந்திரன் இப்படித்தான் கூறினானாம் அதவாது, சிறையை விட்டு வெளியே வந்தபின் மீண்டும் விரைவில் இதே ஸ்டேஷனுக்குள் மீண்டும் போவேன் என தெனாவட்டாக கூறியதாக செய்திகள் கசிகிறது.

அதே நேரத்தில், இப்படி தொழில் செய்து பிழைப்பு நடத்தறவன் எங்க திருந்தப் போறான். பழையபடியும் போலீஸ் செந்திலுக்கு கப்பம் கட்டி மகேந்திரன் தொழில் தொடங்குவான்.அந்த பத்திரிகைகாரனும் பழையபடியும் எழுதுவான். இவன் மீண்டும் கைதாகி மதுக்கூர் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டு இந்த "வாய்ச் சொல் வீரனடி " சிறைக்கு போவான் என மற்றொரு தரப்பிலும் செய்திகளை கசியவிட்டும் வருகின்றனர்.

எனவே அதிராமபட்டிணம் காவல் ஆய்வாளாரான அண்ணாதுரை அவர்களால்,தற்போது மதுக்கூர் -ல் கைது செய்யப்பட்ட மகேந்திரனின் சமூக விரோத தொழில்கள் அறிந்தும், மற்றும், சென்னை ஐ.ஜி-யின் நினைவலைகளை தெரிந்தும் மேற்கண்ட குற்றவாளிகளை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் மகேந்திரனையும், அவனது வாட்டாகுடி கூட்டாளிகளையும் கைது செய்ய பணிந்து கோருகிறேன்



நெல்லை கோபால்
மூத்த பத்திரிகையாளர்.
28-06-2022/9994478389.